
# தூண்டில்

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO

NR. 2



வாழ்க்கையை
எழுத
எண்ணங்களை இட்டு
நிரப்பிய
எதிர்காலப் பேனுவை
எடுத்தோம்.

தவறி
விழுந்தது.
தேடுகிருேம்.

எலும்புக்கூடுகளே
எமது
கைகளில்...

அட்டைப்படக் கவிதை

# தீர்வு வருமா?

மேலே பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருப்பவைதான் இன்று ஒவ்வொரு மனிதனையும் ஏங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கேள்வி மட்டும் எவருக்கும் வித்தியாசப்படவில்லை. எவராலும் இதற்கு விடையும் கண்டுபிடிக்கப்படவில்லை. உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள எல்லா மனிதர்களையும் ஏதோ ஒரு பிரச்சினை பாதித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் எல்லோரும் நிரந்தரமான தீர்வு கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கிலிருந்து தெற்கு வரை, கிழக்கிலிருந்து மேற்கு வரை எத்தனையோ விதமான, ஏராளமான பிரச்சினைகள். பாரிய அழிவுகள். பலத்த சேதங்கள். மனித இனத்துடன் ஏனைய ஜீவராசிகளும் அநியாயமாக அழிந்து கொண்டிருக்கின்றன.

இயற்கை கூட உயிர்களை வெறுக்க ஆரம்பித்துவிட்டது. குடி நீருக்காக மக்கள் வரிசையில் வாடிப் போய் நிற்கும் பரிதாபம் இந்தியாவில். மனிதர்களையும், மற்றைய உயிரினங்களையும் மூழ்கடிக்க மழை தேர்ந்தெடுத்த இடம் பங்களாதேஷ். சீனாவில் பற்றிய நெருப்பு மரங்களை எரித்து மனிதர்களையும் தொட்டது. நாற்பது பாகைக்கு மேலான வெப்பம் கிரீக் மக்களை வறட்டியது. பசியாலும், பட்டினியாலும் நம்பிபியா, எத்தியோப்பிய நாடுகளில் இரத்தம் சிந்தாத மரணங்கள் தொடர்கின்றன.

திடீரென கோபித்துக் கொள்ளும் இயற்கையால் அப்பாவி உயிர்கள் அழிந்து போகின்றன. உடமைகள், இருப்பிடங்கள் அழிக்கப்பட உயிர்ப் பாதுகாப்பு தேடி தப்ப வேண்டியுள்ளது. அகதிகளின் எண்ணிக்கை பெருகுகிறது.

இயற்கை ஒரு புறம் கொலைகளை குத்தகைக்கு எடுத்திருக்க விஞ்ஞானம் மறுபுறம் போட்டிக்கு நிற்கிறது. இயற்கை அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதில் அக்கறை கொள்ளாத விஞ்ஞானம் உயிர் அழிப்பில் ஆர்வம் காட்டுகிறது. டைனமைற்றிலிருந்து அணுகுண்டு வரை வந்துவிட்ட விஞ்ஞானம் அழிவின் சான்றிதழைப் பெற முயன்று கொண்டிருக்கிறது.

கோடாரிக் காம்பே மரங்களின் அழிவில் பங்கெடுப்பது போல மனித னே இன்னொரு மனிதனின் அழிவுக்கு காரணமாகிறான். சனத் தொகைக் குறைப்புக்கு தன்னாலான முயற்சிகளை செய்து வருகின்றான். அணுகுண்டு பரிசோதனைகளால் பயிர்கள் நாசமாகின்றன. புதிய நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. கால நிலையே மாற்றப்படுகிறது. நெவேடா பாலைவனம் பனிமழையைச் சந்திக்கிறது. சூரியனின் பயங்கர வெளிப்பாடான புற ஊதாக்கதிர்கள் பூமியிலுள்ள உயிர்களை பாதிக்காமல் பாதுகாத்து வந்த ஓசோன் படலத்தில் துளை விழுந்துள்ளது. இதனால் கண்ணுக்குத் தெரியாத பாதகங்கள் ஆரம்பித்துவிட்டன. முகம் தெரியாத எதிரிகளால் மக்கள் துன்பத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானத்தின் பெரும்பிரிவான ஆயுதங்கள் மனிதனின் மனத்தையே மாற்றி விட்டன. பிரச்சினைகளுக்கெல்லாம் ஆயுதங்களால் பதிலளிக்கும் விருப்பம் அநேகமானோரின் மனதில் வேரூன்றிவிட்டது. இரத்தத்தின் நிறம் பலர் கண்களுக்குப் பாலாகத் தெரிகிறது. உயிரின் பெறுமதி குறைந்து கொண்டிருக்கிறது. அண்ணனும் தம்பியும் தமக்கிடையேயான சச்சரவுகளை ஆயுதங்களால் தீர்த்துக் கொள்ளும் நிலையே வந்து கொண்டிருக்கிறது.

அடிப்படை மனித உரிமைகளுக்காகவும், மனித சுதந்திரத்திற்காகவும் நமது இனம் ஆயுதங்களை நாட வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானது. வாழ வேண்டிய வயதினர்கள் எல்லோருடைய நலன்களுக்காகவும் தமது சுகங்களை துறந்தார்கள். அடக்கு முறைகளுக்கு அதிக பலம் இருந்ததால் தமிழ்பகுதிகள் இரத்தத்தில் மூழ்கின. தமிழ் மக்களின் நாளாந்த சாதாரண வாழ்க்கையே முற்றுமுழுதாக மாறிவிட்டது. இன்று சமாதானமும், அமைதியும் நெடுந்தூரத்துக்குப் போய்விட்டன. துன்பங்களை முகம் கொடுத்துள்ள ஜீவன்கள் அவற்றை நெருங்கும் போதெல்லாம் சிலரின் கன்மூடித்தனங்களால் தொடர்ந்தும் அவை விலகிப் போய் கொண்டிருக்கின்றன. இழப்புகளைப் பற்றிய கவலை புரிய வேண்டியவர்களுக்கே புரியவில்லை. செங் கம்பளம் விரிப்பதும், வெற்றுத் தாள்களில் கிறுக்குவதும் வீரத்தை பறை சாற்றுவதுமே இன்று மனித உயிர்களை விட முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. நமது பெற்றோர்கள், சகோதரர்கள், உற்றோர்கள், நண்பர்கள் ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மட்டுமல்ல ஓடி வந்துவிட்ட எங்களையும் ஏங்க வைக்கும் கேள்வி தீர்வு வருமா என்பதே.

ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களை அடிமைப்படுத்த முயல்கிறான். தான் ஆள்வதாக நினைத்துக் கொள்கிறான். உண்மையில் இயந்திரங்களும், ஆயுதங்களுமே மனிதரை ஆளுகின்றன. இந்த உண்மை எல்லோருக்கும் புரியும் வரை தீர்வு வருமா என்ற கேள்விக்கு விடை கிடைக்காது.

## முடிவும்-சமுதாய மனோபாவமும்

முடிவெடுப்பதற்கு முன் பலரை நாம் யோசனை கேட்கிறோம். விஷயம் தெரிந்தவர்களை, அனுபவப் பட்டவர்களை, அவர்கள் தாங்கள் கூறுகிற முடிவுதான் சரியானது என்று வாதிக்கக் கூடும். அந்த முடிவை நாம் ஏற்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கக் கூடும். அப்படி ஏற்காவிட்டால் நம்மைப் புறக்கணிக்கக்கூடும். அவர்கள் அபாயமானவர்கள்.

நமது வளர்ச்சியை, இவர்கள் கட்டுப்படுத்துகிறார், கள்; கெடுக்கிறார்கள். நம் வாழ்க்கை நம் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும். சரியோ, தவறோ நாம் தான் அதற்குப் பொறுப்பாளியாக இருக்க வேண்டும்.

"ஒருவனுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் ஒருநாள் உணவு தருகிறோம். அதற்குப் பதிலாக அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்தால் வாழ்நாளுக்கான உணவைத் தருகிறோம்" என்கிறது ஒரு ஆங்கில வாசகம். அதேபோல, நாம் நமது நண்பர்கள் முடி வெடுக்கப் பல யோசனைகளையும் சொல்லி உதவினால், அவர்கள் முடிவெடுக்கும் வழிகளைத் தாங்களே கண்டு பயனடைவார்கள்.

பிறருக்காக நாம் முடிவெடுத்தால், நாம் அவர்களை நம்மைச் சார்ந்தவர்களாக வாழ்நாள் முழுவதும் ஆக்கு கிறோம். இப்படி சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயத்தைத் தான் தமிழ்ச் சமுதாயமாக உருவாக்கி இருக்கிறோம்.

பதினெட்டு வயதான பின்பும், படித்து முடித்த பின்பும்கூட தாய் தந்தையரைப் பணத்திற்காக எதிர்பார்க்கும் பிள்ளைகள்; தன்னால் சம்பாதிக்க வக்கில்லாததை, மனைவிமூலம், மாமியார் மூலம் பெற முயலும் மாப்பிள்ளை; எதற்கெடுத்தாலும் அரசாங் கத்தில் ஏதேனும், யாரையாவது பார்த்துச் செய்ய முடியுமா என்று பல வழிகளில் அரசாங்கத்தைச் சார்ந்து நிற்கும் சமுதாயம்; தலைவன் என்ன சொன்னா லும் சரி, என்று தலைவனைச் சார்ந்து நிற்கும் ஒரு

அறிவில்லாத கூட்டம். எப்படி இருக்கிறது நமது சமுதாயம்?

சார்ந்து நிற்கும் சமுதாயம், தன் பொறுப்புக்களைப் பிறர் தலையில் சுமத்திவிட்டுக் கையேந்தி நிற்கிறது. நாடு இன்று இப்படி நிற்கிறதா இல்லையா என்பதை, நல்லவர்கள், படித்தவர்கள், நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்களெல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தன் காலில் நிற்பவன் தன் இஷ்டப்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான்; தன் விஷயங்களைப்பற்றித் தானே முடிவு எடுக்கிறான். வீட்டிலும், வெளி உலகத்திலும் நமக்காக, நம் அப்பாவும், அம்மாவும், பாட்டியும், ஆசிரியரும் மேலதிகாரியும் அரசியல் தலைவரும் முடிவெடுக்கும்போது, தனி மனித சுதந்திரம் பறிபோகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் தனிமனிதனுக்குச் சுதந்திரம் இருப்பதாக நம் ஊரில் பெரிதாக யாரும் நினைப்பதில்லை. ஏதோ ஊர், உலகம், சமுதாயம் என்ற கட்டுப்பாட்டுக்குள் தம் வாழ்க்கையைச் சிறைப் படுத்திக்கொண்ட தியாகிகளாய் மிகப் பெரும்பாலோர் வாழ்கிறார்கள்.

தனி மனிதன் தன் உரிமைகளை உணர்ந்து, பிற உரிமைகளை மதித்து தன் காலிலே நின்றுதான் சுதந்திரமாக காரியங்களைச் செய்யவேண்டும். அது முடியும் என்று உணராதவரை நமது நாடு இப்படியே தான் இருக்கும். சமுதாய மாற்றம் முதலில் தனி மனிதனில் தொடங்கவேண்டும்; சுதந்திர உணர்வு தனி மனிதனிடம்தான் முதலில் மலரவேண்டும். அப்போது தான், ஒரு மனிதன் தான் எதைச் செய்ய ஆசைப்படுகிறானோ அதைச் செய்வான். அப்போதுதான் அவனது ஆக்க சக்திகள் பூரணத்துவத்துடன் அவனிடமிருந்து மலரும். நமது ஊரில் சுதந்திர உணர்வு பயந்து அடங்கிப் போயிருக்கிறது, பயத்தினால் ஆட்டிப் படைக்கப்படும் மனிதன், முதலில் தன் சுதந்திரத்தைத் தான் பறிகொடுக்கிறான்.

அமெரிக்க நாட்டின் உரிமைச் சாசனத்தில் ஒரு சொற்றொடர் வருகிறது, Pursuit of Happiness என்று 'ஒவ்வொரு மனிதனும் அவன் ஆசைப்படும் சந்தோஷங்களை அடைய முயலும் சுதந்திரம் உண்டு' என்று

தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது.

வாழ்க்கையை, நமக்கும் பிறருக்குமாக மகிழ்வுடன் —சந்தோஷமுடன் வாழ முயல்வதுதான் வாழ்க்கையின் லட்சியம். அந்த லட்சியத்தைப் பின்பற்றிச் செல்லும் முழு சுதந்திரத்தையும் அளிக்கிறது, அமெரிக்க உரிமைச்சாசனம். அதனால்தான் அமெரிக்க மக்கள் ஒவ்வொருவரும் பிறரிடமிருந்து வேறுபடுகின்றனர். ஒவ்வொருவரும் பிறரைப்பற்றிக் கவலைப் படாமல் தங்கள் வாழ்க்கையை வாழ்கின்றனர். அதனால்தான் பயமோ அச்சமோ இல்லாமல் அயோக்கியர்களை அயோக்கியர்கள் என்று கூறி நீதி மன்றத்தில் ஏற்றுகின்றனர். அவர்கள் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை அவர்கள்தான் எடுக்கிறார்கள்.

அடுத்ததாக, நமது சமுதாயம் மதிக்கும் கோட்பாடுகள், பாரம்பரியம், நம் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கிறது. ஆகவே இதற்கேற்றாற்போல் நாம் முடிவெடுக்கிறோம். அதாவது, சமுதாயம் இப்படி எதிர்பார்க்கிறது என்று, அதற்கேற்றாற்போல.

'நெஞ்சில் ஓர் ஆலயம்' என்ற பழைய படத்தில் கதாநாயகி பாடுகிறாள், 'ஒரு முறைதான் மலரும் மலரல்லவோ' என்று. அதாவது, கணவனுக்கு வாழ்க்கைப்பட்டவள் அர்ச்சிக்கப்பட்ட பூவுக்குச் சமானம். ஒரே ஒரு முறைதான் மலரும் மலர் என்று சொல்லி, அதாவது கணவனை இழந்த பெண் என்ன செய்யவேண்டும்? கணவனை எண்ணிச் சோகத்தின் சுமையாக, விதவையாக வாழவேண்டும். மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்துகொள்வான், அது சகஜம். கணவன் இறந்தவுடன் ஒரு பெண்ணின் வாழ்க்கை முடிந்துவிடுவதில்லை. அவளுக்கு வாழ்க்கை இருக்கிறது; வயிறு இருக்கிறது; உழைக்கும் உடல் இருக்கிறது; உணர்வுகளை ரசிக்கும், மகிழும் உள்ளம் இருக்கிறது. இத்தனை உண்மைகளையும் பெரிய பூசணிக்காயை நாம் சோற்றில் மறைத்து, 'ஆகா, நீ தியாகி!' என்றும், 'அவள் விதி' என்றும் கூறி, பெண்ணின் வாழ்க்கையை நமது முன்னோர்கள் ஒடித்து வைத்து விட்டார்கள். சமத்துவமில்லாத அதர்மம்.

மாறுபட்ட வாழ்க்கைக்கோ, மறுமணத்திற்கோ தன்னைக் காப்பாற்றும் ஒரு தொழிலில் பயிற்சி பெறவோ, அவளை நம் சமுதாயம் தயார் செய்வதில்லை. இப்படிச் சமுதாய மனோபாவம் நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்கிறது. நமக்காக முடிவெடுக்கிறது. கவிஞர் ரோகிணி தனது 'தேன் முள்ளுகள்' என்ற கவிதைப் புத்தகத்தில் எழுதுகிறார்:

"எங்கிருந்தாலும் பெண்
சாவி கொடுத்த பொம்மையாக
மூளையைக் கசக்கிக் கொள்ளாமல்
இயங்குவதற்கெனவே
காலங்காலமாக கற்பிக்கப்பட்டிருக்கிறாள்
தருமதேவதைகள்
அன்னபூரணிகள்
கிருகலட்சுமிகள்
அழகுதேவதைகள்
இந்த அடைமொழி
ஊன்றுகோல்கள்
இல்லாமல்
நமது பெண்மணிகளால் நடக்கமுடியாது"

என்று.

சமுதாயக் கொடுமையினைப் பாருங்கள்!

முடிவெடுக்கும் நிலை, ஒரு பெண்ணிடமிருந்து பறிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், என்ன ஆகும்? ஒரு செயலற்ற தன்மை, விரக்தி, ஆற்றாமை அவள் உள்ளத்தில் பரவுகிறது.

அதேபோல, வடக்கேயும் போக முடியவில்லை, தெற்கேயும் போக முடியவில்லை என்கிறபோது ஒரு வேலையில்லாத இளைஞன் என்ன செய்கிறான்? ஒரு வாய்ப்பில்லாத மனிதன் என்ன செய்கிறான்? அவனிடம் படிப்பிருக்கிறது; திறமை இருக்கிறது; உழைக்கத் தயார், எனினும்...

அவனிடம் ஆற்றாமை வேகம் மூள்கிறது. நெஞ்சு பொருமுகிறது. மனிதனின் செயலற்ற தன்மை ஒரு

சரிந்த சாம்ராஜ்யத்தை உருவாக்குகிறது. இல்லா விட்டால், இந்த ஆற்றுமை வேகம் அணை உடைத்துக் கொண்டு எழும் வெள்ளத்தைப்போல, பொங்கி வெடிக்கும் எரிமலையைப் போல, புரட்சியாக வெளியே வருகிறது.


பிரச்சினைகளுக்கு
முடிவு காண்பது எப்படி?
DECISION MAKING SCIENCE

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.


## பறந்துவரும் பயங்கரங்கள்..

30 வருடங்களுக்கு முன் விஞ்ஞான ஆராய்சிக்காக ஆபிரிக்காவிலிருந்து ஆட்கொல்லித் தேனிக்கள் பிறேசிலுக்கு கொன்டு வரப்பட்டன. சில வருடங்களின் பின் பார்வையாளர் ஒருவரின் கவனக் குறைவால் சுமார் 20 தேனீக்கள் பாதுகாப்பான இடத்திலிருந்து தப்பிவிட்டன. தப்பிய தேனீக்கள் தற்போது 20 இலட்சத்துக்குமதிகமாகப் பெருகிவிட்டன. இப்போது இத் தேனீக்கள் பெரும் நாசங்களை விளைவித்தவாறு பொலிவியா, பெரு, கொலம்பியா நாடுகளினூடாக மெக்ஸிகோவுக்கு வந்துள்ளன. பயங்கரமான இத் தேனீக்களால் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இத் தேனீக்கள் அடுத்தாக அமெரிக்காவுக்குச் செல்லலாமென எதிர்பார்க்கப்படுகிறது.




# ஜேர்மனியில்...

## சமூக உதவி !
## நாடு கடத்தல்!!
## குடியேற்ற அந்தஸ்து!!!

செஞ்சிலுவைச்சங்க அகதிகள் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்தவரும், நோர்த்றைன் வெஸ்ற்பாலியா அகதிகள் ஆலோசனை மன்ற பேச்சாளருமான திருமதி. கைன்றிச் அவர்களைச் சந்தித்து உரையாடினோம். எமது உரையாடலின் சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

— கடலோடிகள்.

கட — ஜேர்மனியின் பொதுசனத் தொடர்பு சாதனங்களில் சமீப காலமாக வெளிநாட்டு அகதிகள் பற்றிய செய்திகள் அடிக்கடி இடம் பெறுகின்றன. இச் செய்திகளால் பலர் குழப்பமடைந்திருக்கிறார்கள். ஆகவே வெளிநாட்டு அகதிகளுக்கான சட்டங்களில் செய்யப்பட்டிருக்கும் புதிய மாற்றங்களைப் பற்றி விளக்கமாகச் சொல்கிறீர்களா?

கைன் — அப்படி மாற்றங்கள் எதுவும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. குறிப்பிட்ட சில விசயங்கள் சமஷ்டி உள்துறை அமைச்சினால் தீவிர ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கட — அந்த விசயங்கள் எவை என்று சொல்ல முடியுமா?

கைன் — ஒன்று சமூக உதவிகள். மற்றையது நாடுகடத்தல் பற்றிய விதிமுறைகள்.

கட — சமூக உதவிகள் பற்றி என்ன தீர்மானிக்கப்பட்டுள்ளது?

கைன் — இதுவரையும் இங்கே ஜேர்மனியர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் சமூக உதவிகள் சம்பந்தமான சட்டம் பொதுவானதாகவே இருந்து வருகிறது. புதிய ஆலோசனை சட்டமாக்கப்பட்டால் வெளிநாட்டவர்களுக்கான சமூக உதவிகளுக்கென புதிய சட்டம் உருவாக்கப்படும். அதன்படி வெளிநாட்டவர்களுக்கான சமூக உதவிகள் குறைக்கப்படும். மாநில அரசுகள் குறைக்கப்பட்ட சமூக உதவியை உணவுப் பொருட்களாகவும், கைச் செலவுக்கென சிறு தொகைப் பணத்தையும் வழங்கும்.

கட — தற்போது கூட சில மாநிலங்களில் உணவுப் பொருட்களும், கைச் செலவுக்கான பணமும் வழங்குவது நடைமுறையிலுள்ளது. இதற்கும் புதிய ஆலோசனைகள் சட்டமாக்கப்பட்டால் ஏற்படப்போகும் மாற்றங்களுக்குமுள்ள வித்தியாசங்கள் என்ன?

கைன் — மத்திய அரசால் உருவாக்கப்படும் சட்டங்களை மாநில அரசுகள் தமது அரசியல் கொள்கைக்கிணங்கவே நடைமுறைப்படுத்தி வருகின்றன. புதிய ஆலோசனைகள் சட்டமாக்கப்பட்டால் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவி சகல மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். இன்னும் விபரமாகச் சொல்வதாயின் இது நாள்வரை சமூக உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றுதான் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததே தவிர உதவிகள் எப்படி வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை. இனிமேல் குறிக்கப்பட்ட உதவிதான் வழங்கப்பட வேண்டும் என மாற்றம் செய்யப்படும். இதனால்எல்லா மாநில அரசுகளும் ஒரே மாதிரி சமூக உதவிகளை வழங்க வேண்டி வரும்.

கட — வெளிநாட்டவர்களுக்கான சமூக உதவியில் ஏன் இப்படியான மாற்றங்கள் கொண்டுவர ஆலோசிக்கப்படுகிறது?

கைன் — மூன்று காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. முதலாவது, ஒருவருக்கு அகதி அந்தஸ்து கிடைக்கும்வரையிலான காத்திருக்கும் காலத்தில் அவருக்கு ஏனையோரைப் போன்ற உதவிகள் கிடைக்கத் தேவையில்லையென்பது. இரண்டாவது, நாட்டுக்கு பொருளாதார அகதிகள் பலர் வருவதை தடுப்பதற்கு. மூன்றாவது, அகதிகளுக்கான இந் நாட்டின் செலவினம் 20 கோடியாக அதிகரித்தமை. இவையே மத்திய அரசால் சொல்லப்படும் காரணங்கள்.

கட — புதிய மாற்றங்கள் செய்ய ஆலோசிப்பதை அகதி உதவி ஸ்தாபனங்கள் எதிர்க்கவில்லையா?

கைன் — ஆலோசனைகள் ஆரம்பித்த நாளிலிருந்தே பல ஸ்தாபனங்கள் தமது எதிர்பை தெரிவித்து வருகின்றன. எமது ஸ்தாபனமும் சில காரணங்களைக் காட்டி எதிர்பு தெரிவிக்கிறது.

கட — அவை என்ன காரணங்கள் என்று சொல்வீர்களா?

கைன் — முதலாவது, வெளிநாட்டவர்களை மனிதாபிமானமற்ற முறையில் மற்றவர்களிலிருந்து ஒதுக்கி வைக்க புதிய ஆலோசனை வழி வகுக்கிறது. இரண்டாவது, இங்கு வந்திருப்பவர்களில் பெரும்பாலானோர் அரசியல் அகதிகளே. பொருளாதார அகதிகள் மிகச் சிறிய அளவினரே. மூன்றாவது, இப்போதும் சில மாநிலங்களில் உணவுப்பொருட்களும், சிறு தொகைப் பணமும் வழங்கிவருகிறார்கள். அப்படியிருந்

தம் அகதிகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.இக் காரணங்களைக் காட்டியே நாம் புதிய ஆலோசனையை எதிர்க்கிறோம்.

கட — புதிய ஆலோசனைகள் சட்டமாக்கப்படின் வேறு என்ன பாதிப்புகள் ஏற்படும்?

கைன் — சமூக உதவி பெறுபவர்கள் வெளிநாட்டவர்களும்,வருமானம் இல்லாத ஜேர்மன் மக்களுமே.புதிய ஆலோசனை சட்டமாக்கப்பட்டு வெற்றியளித்தால் சமூக உதவிகளைப் பெறும் ஜேர்மன் மக்களும் எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம்.இப்போது கிடைப்பதே குறைவான சமூக உதவிகள் தான்.இதவும் குறைக்கப்பட்டால் மன, உடல் ரீதியிலான பாதிப்புகள் ஏற்படும்.

கட — மேற்கு ஜேர்மனி ஒரு செல்வந்த நாடு.இந் நாட்டில் இப்படியான சட்ட மாற்றங்கள் கொண்டுவருவதை ஜேர்மன் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா?

கைன் — ஏற்றுக்கொள்ள மாட்டாது என்றே நான் நம்புகின்றேன்.வெளிநாட்டு அகதிகள் வறுமைக்கோட்டிற்கு கீழே தள்ளப்பட அனுமதிக்கக் கூடாது.

கட — இந்த விடயத்தைப் பொறுத்த வரையில் உங்கள் கருத்து என்ன?

கைன் — அனைவருக்கும் வேலை அனுமதி கொடுக்கப்பட்டால் சமூக உதவி வழங்கல் பிரச்சினையும்,அகதிகளுக்கான செலவினமும் குறையும்.புதிய ஆலோசனைகள் அகதிகளின் வருகையை தடுக்க மாட்டாது.

கட — முதலில் குறிப்பிட்ட நாடுகடத்தல் விதிமுறை மாற்றங்கள் பற்றி என்ன ஆலோசனை செய்யப்பட்டுள்ளது?

கைன் — பலரின் தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.சில சில நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய சொந்த நாடுகளில் தற்போதுள்ள நிலைமை காரணமாக அவர்களை நாடு கடத்தாமல் சகிப்புப் பத்திரம்( DULDUNG ) வழங்கப்படுகிறது. இந்தப் பத்திரம் கிடைத்தவர்களுக்கு இந்த நாட்டில் எந்த உரிமையுமில்லை.சமூக உதவி பணம் மட்டுமே வழங்கப்படுகிறது. இந்தப் பணமும் அந்தந்த நகர நிர்வாகங்களாலேயே வழங்கப்படுகிறது.தஞ்ச நடைமுறை முடிவுறாதவர்களுக்கு மாநில அரசினால் சமூக உதவிப் பணம் வழங்கப்படுகிறது.தற்போது சில நகரங்கள் பொருளாதார நெருக்கடியிலுள்ளன.இதனால் அந்த நகரங்கள் 'டுல்டுங்' கிடைத்தவர்களுக்கு சமூக உதவிப் பணம் வழங்குவதை முற்றாக நிறுத்த ஆலோசிக்கின்றன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# கனவை மிதித்தவன்

பார்த்திபன்

பாலகுமார் சுவரோடு ஒட்டியபடி தலைகீழாக நின்றான். அவனருகே நின்ற அழகிய பெண் ஒருவள் அவனை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவைத் திறந்து உள்ளே வந்த முத்துவும், ஞானமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அறைக்குள் தனது நண்பர்கள் தலைகீழாக வருவதைப் பார்த்த பாலகுமார் உடனே நேராகிவிட்டான். முகத்தில் வெட்கம் வியர்வையில் நனைந்திருந்தது.

"என்ன விளையாட்டு விளையாடுறாய்?" ஞானம் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"எங்களையும் சேரேன்" முத்து சிரித்தான்.

"அது..." பாலகுமார் இழுப்பதற்குள் அங்கிருந்த பெண் குறுக்கிட்டாள். "ஏய், வைற்ற: மாகன் " (தொடர்ந்து செய்)

"ஆர்டா இது? என்ன செய்யட்டாம்?" முத்து ஒன்றும் புரியாமல் கேட்டான்.

"இப்ப ஒண்டும் கேளாதை. முதல் வெளியில ஓட வேணும்." பாலகுமார் வேகமாக அறையை விட்டு வெளியேறினான்.

"கொம் சுறுக்" (திரும்பி வா) பின்னால் அந்தப் பெண் கத்திக்கொண்டிருந்தாள்.

மூவரும் தாதியின் அறைக்குப் போய் வெளிக் கதவைத் திறந்து விடும்படி சொன்னார்கள். நண்பனை அடிக்கடி வந்து பார்க்கும்படி சொல்லி பாலகுமாரையும், ஞானத்தையும் மட்டும் வெளியே அனுப்பி கதவை மறுபடி பூட்டினாள் தாதி.

பாலகுமாரும், ஞானமும் கொஞ்சம் நடந்து போய் திரும்பிப் பார்த்தார்கள்.

கதவுக்கப்பால் முத்து பரிதாபமாக கையசைத்துக் கொண்டு நின்றான். இருவரும் கை காட்டிவிட்டு நகர்ந்தார்கள்.

"முத்து பாவம் என்னடா?" ஆஸ்பத்திரியிலிருந்து வெளியில் வந்ததும் பாலகுமார் சொன்னான்.

"அப்பு, அம்மாவோ, சகோதரங்களோ கிட்ட இல்லாம இப்பிடி தனிய இருக்க எவ்வளவு கஷ்டமாயிருக்கும்" ஞானமும் கவலைப்பட்டான்.

"நாங்களாவது கட்டாயம் அடிக்கடி வந்து பாக்க வேணும். அப்பதான் அவனுக்கு ஆறுதலா இருக்கும்"

"நாங்களில்லாம வேற ஆர் கவனிக்கிறது. இங்க இருக்குமட்டும் அப்பா, அம்மா எல்லாம் நா ம் மேற்ஸ்தான்"

இருவரும் முத்துவைப் பற்றி அக்கறைப்பட்டபடியே பஸ் பிடித்தனர்.

"என்ரா அந்த நா முக்க த லைகீழா நிண்டனி?" பஸ்ஸில் பயணிக்கையில் ஞானம் கேட்டான்.

"அதொரு சோகக்கதை" பெருமூச்சை வெளியிட்டு ஆரம்பித்தான் பாலகுமார். "கதவு தட்டிச் சத்தம் கேட்டதெல்லே. அப்ப திறக்கப் போனன். வெளியில வடிவா பெட்டை ஒண்டு நிண்டு டொச்சில என்னவோ கேட்டிது. எனக்கு விளங்கேல. இன்டியனோ எண்டு கேட்டாள். நானும் சும்மா யா எண்டன். தன்னோட வரச் சொன்னாள். நானும் போனன். அறைக்குள்ள போன உடன கதவைப் பூட்டினாள்" பாலகுமார் இடையில் நிறுத்தி இடைவெளி விட்டான். ஞானம் ஆவலுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஞாயிற்றுக்கிழமையாததால் பஸ்ஸில் பிரயாணிகள் குறைந்திருந்தனர். இவர்கள் கதைப்பதற்கு வசதியிருந்தது.

"இந்தியா எண்டா யோகாசனம் தெரிஞ்சிருக்கும். ஏதோ புத்தகத்தில படிச்சனான் எண்டாள். நான் அதுக்கும் யா எண்டன். குறுக்கால போவாள் உடன எல்லா ஆசனங்களையும் அப்பவே போட்டுக் காட்டச் சொல்லிப்போட்டாள். நான் பகிடியாக்கும் எண்டு சிரிச்சன். அவள் பட்டர் பூசிற கத்தியை எடுத்து காட்டினாள். உடன எல்லா ஆசனங்களையும் போடத் தொடங்கியிட்டன்." பாலகுமார் வெட்கமாக முடித்தான்.

"அவசரத்துக்கு கடைக்குப் போட்டுவரச் சொன்னா படுத்துக் கிடவுங்கோ. ஆரேன் பெட்டையளெண்டா யோகாசனம் செய்து காட்டுங்கோ" ஞானம் முணு முணுத்தான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி இருவரும் கட்டிடத்திற்கு வந்தார்கள்.

"முத்துவைப் பாத்தனீங்களே?"

"என்ன செய்யிறான்?"

"அங்கயும் குழப்படியோ?"

அறையிலிருந்த நண்பர்கள் பாலகுமாரையும், ஞானத்தையும் விசாரித்தார்கள்

சில நிமிடங்களில் முத்துவின் விசயம் அவர்களிலிருந்து மறைந்து விட்டது. வழமையான அன்றாட அலுவல்களில் அவர்கள் இயந்திரத்தனமாக ஈடுபட்டார்கள்.

படம் ஓடியது.

சமையல் நடந்தது.

சாப்பிடப்பட்டது.

அரட்டையடிக்கப்பட்டது.

அன்றைய நிகழ்ச்சிகளை நித்திரை நிறைவு செய்தது.

மறுநாள்.

அவர்களின் அதிகாலை பதினொரு மணி. ஒவ்வொருவராக சோம்பலுடன் எழுந்து, காலைக் கடன்களை முடித்து, ஜீன்ஸ், ஜக்கற் போட்டு, தலை சீவிக் கொண்டார்கள்.

"கடிதம்"

வெளியே பல குரல்கள் ஆர்வமாக ஒலித்தன.

வெளிக்கிட்டுக் கொண்டிருந்தவர்கள் இடையில் நிறுத்தி அவசரமாகக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார்கள்.

ஞானம் தொடர்ந்தும் சப்பாத்தைப் போட்டு லேசை முடிந்துகொண்டிருந்தான்.

முன்பு போலஇலங்கைக் கடிதங்களில் இப்போது அவனுக்கு ஆர்வமில்லை. தொடர்ந்து எழுதப்பட்டு வந்த வீட்டுக் கஷ்டங்கள் அவனுள் ஒரு சலிப்பை ஏற்படுத்திவிட்டன. இப்போது கிடைத்துக் கொண்டிருக்கும் சந்தோசங்கள் இலங்கைக் கடிதங்களால் கலைக்கப்பட்டுவிடும் என்ற பயமிருந்தது. அதனால் கடைசியாக வந்த இரண்டு கடிதங்களைக் கூட அவன் படிக்காமல் அலட்சியமாகப் போட்டுவிட்டான்.

ஜேர்மனிக்கு வந்த ஆரம்ப நாட்களில் இலங்கையில் நடக்கும் அநியாயங்களைப் பற்றிய அக்கறை அவனுக்குமிருந்தது. வீட்டில் அம்மாவும், மற்றவர்களும் என்ன கஷ்டப்படுகிறார்களோ என்ற கவலையுமிருந்தது. ஆனால் நாட்கள் செல்ல மனதும், மாதக்களும் பழைய நிலையிலிருந்து புதிய இன்ப மாயைக்கு அவனை இடம்பெயர்த்துவிட்டன.

புதிய நோக்கில் அவன் செல்ல செல்ல வீடும், நாடும் மங்கி, மறைந்து கொண்டிருந்தன.

இலங்கைக்குத் திரும்பிப் போகமல் இங்கேயே இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும் என்ற எண்ணம் அவனில் பெரிதாக உபத்திரவம் செய்து கொண்டிருந்தது. இங்கே நிலையாக இருப்பதற்கான வழிவகைகளை அவன் ஆராய்ந்து பார்த்தான்.

ஒன்று யாராவது ஜேர்மன்காறர் தத்தெடுக்க வேணும். அது அதிஷ்டத்தைப் பொறுத்தது.

இரண்டாவது ஜேர்மன்காரியாப் பாத்து கலியாணம் செய்ய வேணும். கஷ்டம் என்றாலும் முயற்சி செய்யலாம்.

தனக்குள் ஆய்வு நடாத்திப் பார்த்த ஞானம் இரண்டாவது வழியைத் தெரிந்தெடுத்துக் கொண்டான். தனது முயற்சிகளையும் ஆரம்பித்திருந்தான்.

'வின்ரரும்', 'சமரும்'தான் மாறினவேயொழிய ஒரு பெண் கூட அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

ஞானம் யாருக்காகவும் தாஜ்மகாலோ, வசந்தமாளிகையோ கட்டாவிட்டாலும் அந்தக் கட்டிடங்களுக்குப் பெயின்ற் அடிக்கக் கூடிய பணத்தை செலவழித்திருந்தான். கொண்டிருக்கிறன். எல்லாம் அநியாயமாகவே போய்கொண்டிருந்தன.

"முத்துவுக்கு ரண்டு சிலோன் லெற்றர். பாக்கப் போறவை ஆராவது கொண்டு போய் குடுங்கோ" பலமாக அறிவித்தபடி கடிதங்களை மேசையில் ஒருவன் வைத்தான். "ஞானத்துக்கும் ஒரு லெற்றர்"

ஞானம் ஆச்சரியத்துடன் நிமிர்ந்தான். நீண்ட காலத்தின்பின் ஒரு நீலக் கடிதம். படிக்கலாமா, வேண்டமா என்று கொஞ்சம் தயங்கிய பின் ஆர்வமில்லாமலே உடைத்துப் படித்தான்.

"ஸ்ரட்டுக்குப் போகப் போறன். ஆர் வாறியள்?" தயாரான ஒருவன் கேட்டான். ஒருவரும் பதிலளிக்காமல் கடிதங்களில் மூழ்கியிருந்தார்கள்.

"ஞானம் நீ வாடா" என்றவன் ஞானத்தைப் பார்த்து அதிர்ந்தான். "டேய் ஞானம் அழுகிறன்"

(இன்னும் வரும்)

# செய்திக் குறிப்பு இல.47+48
(வீரகேசரிச் செய்திகள்)

23.12.87
கிழக்கு மாகாணத்தில் கொள்ளை நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏறாவூர் கடற் பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது 'ஷெல்' குப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் கொல்லப்பட்டனர்.

ரயில் சேவை இல்லாததால் மட்டக்களப்பில் உணவு, எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விசேட விமானம் மூலம் இந்தியப் பெண் பொலிசார் 100 பேர் யாழ் வந்து சேர்ந்தனர்.

24.12.87
ஐ.தே.க தலைவர், மெய்பாதுகாவலர், சாரதி, வேலையாள், ஆகிய நால்வரும் காரில் சென்று கொண்டிருக்கும்போது வெள்ளவத்தையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலையாளி சைக்கிளில் தப்பியோடினன்.

25.12.87
தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர் (வயது 70) திடீரென வந்த மாரடைப்பால் தனது இல்லத்தில் அமரரானார். தொண்டைமான் தலைமையில் இ.தொ.கா. குழு இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றது. த.வி.கூ செயலாளர் பாரியார் சகிதம் ராஜாஜி மண்டபம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மவுண்ரோடில் இருந்த கருணாநிதி சிலை உடைக்கப்பட்டது. இந்தியா எங்கும் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

26.12.87
எம்.ஜி.ஆரின் பூதவுடல் மெரினா கடற்கரையில் அண்ணா சமாதி அருகில் அடக்கம் செய்யப்பட்டது. இலட்சோபஇலட்சம் மக்கள் கதறியழுதனர். சென்னைப் பகுதியில் 15 பேர் நஞ்சருந்தி மரணமானார்கள். அஞ்சலி செலுத்துமுகமாக இலங்கையில் 5 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாது துக்கம் அனுஷ்டித்தனர்.

27.12.87
இந்தியாவிலிருந்து முதற்கட்டமாக 250 தமிழ் அகதிகள் கப்பலில் தலைமன்னார் வந்தனர்.

29.12.87
யாழ் நகரில் இலங்கை, இந்தியப் பொலிசார் கூட்டாக கடமையில் ஈடு பட்டுள்ளனர்.

27.12.87ல் மட்டக்களப்பில் பொலிசாரால் நடாத்தப்பட்ட வன்செயல்களில் 125 பேர் கொல்லப்பட்டனர். 100க்கு மேற்பட்ட கடைகள் நாசமாக்கப்பட்டன. 160க்கு மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டன.

மண்டபம் அகதிமுகாமில் 7780 அகதிகள் தங்கியுள்ளனர்

30.12.87
வடமாராட்சியில் இ.போ.ச, மினிபஸ் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன.

31.12.87
புலிகள் இயக்கமும், ஜிகாத் இயக்கமும் காத்தான்குடியில் மோதின. இச் சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். நால்வர் கடத்தப்பட்டனர். கடைகள் சேதமாக்கப்பட்டன.

முருங்கனில் புளொட் இயக்கமும், புலிகள் இயக்கமும் மோதின. மறுநாள் பற்றைக்குள் நான்கு பேரின் சடலங்கள் கிடந்தன.

யாழ்குடா நாட்டிலுள்ள பாடசாலைகளிலிருந்து இந்தியப்படைகள் அகற்றப்படுகின்றன.

01.01.88
காத்தான்குடியில் ஜிகாத் இயக்கத்தை தேடி வேட்டை நடாத்திய புலிகள் 30 பேரைச் சுட்டுக் கொன்றதுடன் ஆதரவாளர்கள் 20 பேரைக் கைது செய்தனர்.

02.01.88
யாழ்நகரில் சிவில் நிர்வாகம் ஆரம்பமாவதை ஆட்சேபிக்கும் புலிகள் நகரின் பல்வேறு இடங்களில் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர். இதனால் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன. கடைகள் பூட்டப்பட்டன. சிவில் நிர்வாகத்திற்கு ஒத்துழைக்கக் கூடாதென்றும், இதனை மீறிச்செயற்படுவோர் எத்தனை ஆயிரக்கணக்கில் இருந்தாலும் அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தனியார் கடைகள் திறக்கப்படக் கூடாதென்றும், தனியார் பஸ்சேவை நடைபெறக் கூடாதென்றும் எச்சரித்து எழுதப்பட்ட சுவரொட்டிகள் புலிகளினால் ஒட்டப்பட்டுள்ளன.

திருமதி ஜானகி ராமச்சந்திரன் தலைமையிலும், இரா. நெடுஞ்செழியன் தலைமையிலும் அ.தி.மு.க இரண்டாக பிளவடைந்தது.

03.01.88
வடக்கில் கொள்ளைகள் அதிகரித்துள்ளன. இனம் தெரியாத ஆயுதபாணிகளா ல் திருட்டு நடைபெறும் வீட்டிலுள்ளவர்கள் தாக்கப்படுகிறார்கள்.

04.01.88
திருமலை மாவட்டத்திலுள்ள சிங்களக் கிராமமொன்றை ஆயுதபாணிகள் தாக்கியதில் இரு பெண்கள் உட்பட 8பேர் கொல்லப்பட்டனர்.

05.01.88
யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் தொடர்ந்து ஸ்தம்பித்துள்ளது. வங்கி அதிகாரி ஒருவர் இயக்கமொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டு தந்திக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டார். இதனால் ஊழியர்கள் அச்சப்படுகின்றனர்.

இந்தியாவிலிருந்து 500 தொன் உணவுப் பொருட்கள் காங்கேசன்துறைக்கு கொண்டு வரப்பட்டன.

வவுனியாவில் மக்களுக்குத் தொல்லை தரும் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகள் இந்தியப்படையினரால் கட்டுப்படுத்தப்பட்டன.

அண்மைய காத்தான்குடிச் சம்பவங்களினால் 15,000 முஸ்லீம்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதுடன் 60இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

06.01.88
யாழ்குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் இயங்கச் செய்வதில் இந்தியப்படையினர் ஈடுபட்டுள்ளனர். வங்கிகள் மீண்டும் இயங்கத் தொடங்கின. மூடப்பட்ட கடைகள் திறக்கப்பட்டன. போக்குவரத்து நடைபெறுகின்றது. பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாகவே சமுகமளித்திருந்தனர். இந்தியப்படையினர் ஆசிரியர்களை தம்முடன் அழைத்துச் சென்று வீடுவீடாகப் போய் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறும், எதிர்காலத்தைப் பாழாக்க வேண்டாமென்றும் பெற்றோருக்கு அறிவுறுத்தினர்.

இலங்கை, இந்திய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் உறதிப்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்த சிவில் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வோம். எமது இந்த வேண்டுகோளை மதிக்காது செயற்படும் அனைவரும் துரோகிகளாக கருதப்படுவர் என புலிகளினால் மட்டக்களப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காத்தான்குடி எல்லைப்பகுதியில் 60க்கு மேற்பட்ட குடியிருப்புகள் இனம் தெரியாதோரால் எரிக்கப்பட்டன.

07.01.88
யாழ்குடாநாட்டிலுள்ள பாடசாலைகளை இயங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்தியப்படையினருக்கு பெற்றோரும், ஆசிரியர்களும் ஒத்துழைப்பு

வழங்குவதாகவும், பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகரித்துள்ளதாகவும் இந்திய ஊதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆரையம்பதி கிராமத்தைச் சுற்றிவளைத்த இந்திய இராணுவத்தினர் தேடுதலின்போது 300 பேரைக் கைது செய்து மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அண்மையில் வரவு, செலவுத் திட்டம் மூலம் ஏனையோருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக ஜனவரி மாத இறுதிக்குள் சாதகமான முடிவு ஏற்படாத பட்சத்தில் பெப்ரவரி மாதம் பெரும் வேலை நிறுத்தத்தை இ.தொ.கா நடத்துவது உறுதியென செல்லச்சாமி அறிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளரும், அவரது மகனும் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கந்தஸ்டதங்கமுவ ஐ.தே.க கிளைத் தலைவர் இனம்தெரியாதோரால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டார்.

"பொதுத் தேர்தலுக்கான போராட்டம் வெற்றி பெறும்வரை நான் ஓயப்போவதில்லை" — ரொனிடிமெல்.

சிறில் கார்த்திகே என்ற இலங்கை மாணவர் லேசர் தனிக்கதிர் சாதனமொன்றை ஆக்குவதில் வெற்றி பெற்றுள்ளார்.

08.01.88

யாழ்ப்பாணத்தில் கிராமங்கள் தோறும் விழிப்புக்குழுக்கள் இந்தியப்படையினரால் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடமாராட்சிப் பகுதிகளில் வங்கிகள் இயங்க ஆரம்பித்துள்ளன. போக்குவரத்து நடைபெறுகின்றது. ரியூட்டரிகள் ஆரம்பமாகியுள்ளன.

09.01.88

மொரவாக்க பொலிஸ் பகுதியில் ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். பொலிசாருக்கு தகவல் தருவோருக்கும் இதுதான் தண்டனை என்று குறிப்பு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது.

தீவுப்பகுதிகளில் 48 மணி நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது.

"யாழ் மாவட்டத்தில் எந்த ஒரு இயக்கமும் காரியாலயம் திறக்கவோ இயங்கவோ முடியாது அதற்கு நாம் அனுமதி வழங்கவில்லை. இனிமேலும் வழங்க மாட்டோம். புலிகள் மீது எங்களுக்கு கோபம் இல்லை. அவர்கள் தாக்கினால் நாங்களும் எதிர்த்தாக்குதல் நடாத்துவோம். புலிகள் ஒரு

வீட்டிலிருந்து எம்மைத் தாக்கினல் நாம் அந்த வீட்டை தரைமட்டமாக்குவோம்" - யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய படை கொமாண்டர்.

10.01.88

தமிழ்நாட்டு முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவாக யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் சிலை நிறுவப்பட இருக்கிறது. இச்சிலைக்கு பலர் பண உதவி வழங்க முன்வந்துள்ளனர்.

யாழ் கொழும்பு தனியார் பஸ் சேவைக்கட்டணம் 200ரூபாவிலிருந்து 150ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது சுமார் 30 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

யாழ்நகர் வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. எனினும் மானிப்பாய் சுதுமலைப்பகுதியில் இந்தியப்படையினர் தொடர்ந்து தேடுதல் நடாத்தி வருகின்றனர். அளவெட்டி பகுதியில் இனம்தெரியாத இளைஞர்களால் கொள்ளைகள் நடாத்தப்படுகின்றன.

புளியங்குளம் சந்தியில் அமைந்திருந்த ரெலோ காரியாலயம் மீது புலிகள் தாக்கியதில் 3ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இக்காரியாலயம் இந்தியஇராணுவ முகாமுக்கருகிலேயே அமைந்திருந்தது.

நாவலப்பிட்டி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பண கொள்ளை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வைச்சேர்ந்த 2உறுப்பினர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளைப்பணம் மீட்கப்பட்டுள்ளது.

12.01.88

இந்தியப்படையினர் யாழ்நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களுக்கும் சென்று உடைகள் உட்பட வெளிநாட்டுப் பொருட்களை வாங்கிவிட்டுத் தாங்கள் விரும்பியபடி பணத்தை குறைத்துக் கொடுக்கிறார்களாம்.

ஊரடங்கு வேளையில் இந்தியப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்நகர்ப்பகுதியில் கடைகள் உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

13.01.88

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவ வாகனம்மீது பட்டப்பகலில் ஜே.வி.பி தாக்கியதில் 1 இராணுவ வீரர் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

14.01.88
வவுனியாவில் சிங்கள மாணவர்கள் கல்வி பயிலும் காமினி வித்தியாலயத்திலும், அதன் சுற்றுப்புறத்திலும் இந்திய இராணுவத்தினர் பெருமளவில் நிலை கொண்டுள்ளனர்.

இந்திய இராணுவம் முகாமிட்டிருந்த தென்மாராட்சி பாடசாலைகளில் அநேகமானவற்றில் தளபாடங்கள் இல்லை. விஞ்ஞானகூடங்கள் சேதமடைந்துள்ளன. கட்டிடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. பாடசாலைக் காணிகளிலும், சுற்றுப்புறங்களிலும் இறந்தவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதால் மாணவர்கள் பாடசாலைக்கு வரத் தயங்குகின்றனர்.

15.01.88
திருக்கோயில் பகுதிகளில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதல்களினால் பல மீனவர்கள் காயமடைந்தனர். பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

திருகோணமலையில் இரு தமிழ் ஊழியர்கள் இயக்கமொன்றினால் கடத்தப்பட்டனர்.

17.01.88
வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து 3 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர்.

மானிப்பாய் பகுதி மினி முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன.

19.01.88
நிதி திட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல் மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். எனினும் ஐ.தே.க வின் புளத் சிங்கள எம்.பி யாக தொடர்ந்து இருந்து வருவார்.

புலிகள் இயக்கத்தின் சிவில் நிர்வாக ஒத்துழையாமை நடவடிக்கைகள் மட்டக்களப்பிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அரச அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

20.01.88
மட்டக்களப்பு சிறைச்சாலை 19.01ல் புலிகளினால் முற்றுகையிடப்பட்டு 55 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தப்பிய கைதிகளில் 10 பேர் பின்னர் சரணடைந்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியிலுள்ள கிராமங்களில் களவுகள் அதிகரித்துள்ளன.

21.01.88
இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த எல்லைக் காந்தி பாகிஸ்தானில் 20.01ல் காலமானார். இவரது ஜனஸா ஆப்கானிஸ்தானில் நல்லடக்கம் செய்யப்படும். இவரின் மறைவை ஒட்டி இந்தியாவில் 5 நாட்களுக்கு துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரிய 7 தமிழர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

புதிய நிதி அமைச்சராக நைனு மரிக்கார் நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் 170 குடும்பங்கள் இன்னமும் அகதி முகாம்களில் தங்கியுள்ளன.

22.01.88

சாவகச்சேரியிலும் சிவில் நிர்வாகம் செயற்பட ஆரம்பித்துள்ளது. வங்கிகள், உதவி அரச அதிபர் காரியாலயம், தபாற் கந்தோர் ஆகியவை இயங்குகின்றன. போக்குவரத்துச் சேவையும் நடைபெறுகின்றது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சமாதான நீதவானும், வசாவிளானைச் சேர்ந்த இ.போ.ச. சாரதி ஒருவரும் இயக்கமொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கல்வி போதிக்க பேராசிரியர்கள் இல்லாததால் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

23.01.88

"வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் இனி ஏற்பட வாய்ப்பேயில்லை. தேர்தல் மூலமே தீவிரவாதிகள் தமது பகுதி நிர்வாகத்திற்கு தெரிவாக வேண்டும்" — ஜே.ஆர்.

இந்திய குடியரசு தினத்தில் பூரண கர்த்தால் அனுஷ்டிக்குமாறு புலிகள் கோரியுள்ளனர்.

24.01.88

இராமேஸ்வரத்திலிருந்துகடற்படைக் கப்பலில் 336 இலங்கை அகதிகள் தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுவரை இந்தியாவிலிருந்து 813 அகதிகள் திருப்பியனுப்பி வைக்கப்பட்டதாகவும், மேலும் 900பேர் ஜனவரி 30ம் திகதி அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் அரச அதிபர் மக்பூல் மன்னாரில் ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டார்.

25.01.88

பொதுத் தேர்தல் நடாத்த வேண்டும், பொதுத் தேர்தல் மூலம் பதவிக்கு வரும் கட்சி மாகாணசபைத் திட்டத்தை நீக்கிவிட வேண்டும், இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும், தமிழ் ஈழக் கோரிக்கையை தோல்வியடையச் செய்ய வேண்டுமென ஜே.வி.பிதனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மாதக் கணக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம். விசாரணைகள் இல்லை. மாற்றிக் கட்ட உடுப்புகள் இல்லை. (தொடர்ச்சி 24ம் பக்கம்)

தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை

# நாடு திருப்பியனுப்புவதற்கான வழிவகைகள் குறித்து மேற்கு ஜெர்மனி ஆராய்வு!

## கடந்த வருடம் அகதிகள் 'படையெடுப்பில்' வீழ்ச்சி

1987இல் 57,379 அகதிகள் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர். 1968இல் மேற்கு ஜெர்மனிக்குள் பிரவேசித்து தஞ்சம் கோரிய அகதிகளின் தொகையைவிட இது குறைவானதாகும். அவ்வருடம் சுமார் 1 இலட்சம் அகதிகள் வந்தனர் என உள்துறை அமைச்சர் பிரெட்ரிக் சிம்மெர்மான் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

மேற்கு ஐரோப்பாவிற்குள் தஞ்சம் கோரிவரும் அகதிகளில் 40 சதவீதமானோரின் விடயத்தை மேற்கு ஜெர்மனியே கையாளுகின்றது. பாரதூரமானதாகவும் கவலைக்குரியதாகவும் நோக்கப்பட வேண்டிய சுமை இது என அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் போலந்திலிருந்தே கூடுதலான அகதிகள் மேற்கு ஜெர்மனிக்கு வந்திருக்கின்றார்கள். போலந்துக்காரர்கள் 15,194, துருக்கியர் 11,426, ஈரானியர்கள் 6,538 இலங்கையர்கள் 2,285. மற்றும்படி பெருமளவில் வந்துசேர்ந்தவர்கள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், செக்கோஸ்லவாக்கியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தோராவர்.

9 சதவீத அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. தஞ்ச விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் தொடர்ந்தும் மேற்கு ஜெர்மனியில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, வெளிநாட்டார் வதிவுச் சட்டங்களில் சேர்க்கப்படுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வரும் விரிவான புதிய நடைமுறைகளின் வரையறைக்குள் அவர்களை நாடு திருப்பியனுப்புவதற்கான வழிவகைகளையும் எந்தளவு தூரத்திற்கு அதற்கான நிலைமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் ஆராய்ந்து வருகின்றோம் என சிம்மெர்மான் தெரிவித்துள்ளார்.

1988இன் முதல் ஆறு மாதங்களிலும் ஐரோப்பிய சமூகத்தின் தலைமைத்துவத்தை மேற்கு ஜெர்மனியே வகிக்கவிருக்கிறது. அகதிகள் பிரச்சினை தொடர்பாக ஐக்கியப்பட்ட அணுகுமுறையொன்றை காணுவதற்கு முயற்சிக்கும் நோக்கில் இத்தலைமைத்துவ அந்தஸ்தை பயன்படுத்தப் போவதாகவும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(23ம் பக்கத் தொடர்ச்சி)

உணவும் இப்போது குறைவாகவே கிடைக்கிறது. சந்தேகத்தின் பேரில் வைக்கப்பட்டுள்ள எம்மை விடுவிக்கவும், மாற்று உடுப்புகள் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கும்படி பூஸா முகாமில் வைக்கப்பட்டுள்ள 375 பேர் மட்டு பிரஜைகள் குழுவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

27.01.88

இந்திய குடியரசு தினத்தில் வடக்கு, கிழக்கில் அமைதியான கர்த்தால் நடைபெற்றது. அரச அலுவல்கள், போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன.

தமிழக அகதி முகாமில் 1288 பிள்ளைகள் பிறந்துள்ளனர்.

# தெரியுமா?

1. 'பொதுநல அமைப்பு' என்பது என்ன?
2. ரொடிஉஷியாவின் இன்னொரு பெயர் என்ன?
3. சந்திரனில் மனிதன் முதலில் கால் வைத்தது எப்போது?
4. உலகில் கோப்பியை மிகுதியாக உற்பத்தி செய்யும் நாடு எது?
5. கனடா நாட்டின் சின்னம் என்ன?
6. விண்வெளியில் பறந்த முதல் மனிதன் யார்?
7. சைக்கிளைக் கண்டுபிடித்தவர் யார்?
8. குளிர்சாதனப் பெட்டியில் குளிர வைக்கும் பொருள் எது?
9. டில்லியின் பழைய பெயர் என்ன?
10. எவரெஸ்ட் சிகரத்தில் முதல் முதலாக கால் வைத்தவர் யார்?
11. உலகின் மிகப் பெரிய நகரம் எது?
12. சணலை மிகுதியாக உற்பத்தி செய்யும் நாடு எது?
13. அடை காக்கும் ஆண் பறவை எது?
14. மின்சாரத்தை உண்டாக்கும் மீன் எது?
15. வாண வேடிக்கைகளை முதன் முதல் கண்டுபிடித்தவர்கள் யார்?

விடைகளை அறிய வேண்டுமாயின் புத்தகத்தை தலைகீழாகப் புரட்டியே ஆக வேண்டும்.

விடைகள்

1. இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிலிருந்த நாடுகளின் கூட்டமைப்பு.
2. ஜிம்பாவே.
3. 1969ல்
4. பிறேசில்
5. லில்லிப் பூ
6. யூரி ககாரின்
7. மாக் மில்லன்
8. அமோனியா
9. இந்திர பிரஸ்தம்.
10. டென்சிங்
11. உசங்காய் (சீனு)
12. பங்களாதேஷ்.
13. எமு
14. எலெட்ரிக் ஈல்
15. சீனு

# நூல் அறிமுகம்




ஆசிரியர் : எஸ்.பி.நாதன்

முகவரி : S.Packiyanathan
Droote 13
4600 Dortmund 14

விலை : 90 பெனிக்.

* 1986 மார்கழி மாதத்திலிருந்து மாத சஞ்சிகையாக வெளிவருகிறது.

* உருவகம், சிறுகதைகள், சிறுவர் களஞ்சியம், குறள், சமயம், குறுக்கெழுத்துப் போட்டி, கவிதைகள், பூகோளம், போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன.

* கார்த்திகை—மார்கழி இதழ் சிறப்பு வெளியீடாக அதிக பக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

(கலை விளக்கு பிரதியை எமக்கு தந்தவர்:
திருமதி நிருபா தங்கவேற்பிள்ளை.)

# தீ மழைக்கும் ஓர் குடை உண்டு!



கண்ணீரிலே வாழ்க்கையெனும் ஓடம்
கரையைத்தான் தேடியது ஓடும்
செந்நீரிலே எங்கள் தேசம் ஈரம்
சேவல்தான் இன்னும் கூவக்காணோம்

பவளமலை பன்னீர்க்கடல் வேண்டாமய்யா
பருத்துறங்க எங்கள் பசுந்தரையே போதுமய்யா
குவளைக்குள்ளே குதிரையோடும் கூட்டமில்லை —நாங்கள்
கோலமிட வாசலொன்று வேண்டுமய்யா

தின்பக்காட்டில் மேயும் மான்களா —வலையில்
துள்ளி விழுந்த பாவி மீன்களா
இன்ப ஏட்டில் தமிழன் பெயரே இல்லையா
இலவு காத்த கிள்ளை அது எங்கள் பிள்ளையா

எரிமலையை பனித்துளிகள் என்ன செய்யும்
எமதாடை நெய்திடுவோம் எமது மண்ணில்
நரிக்குகைகள் நம்மிடையே இல்லையென்றால்
நம்மினமும் புள்ளினமாய் வாழ்ந்திருக்கும்

உழைக்கும் வர்க்கமே ஓடி வருகவே
உவகை கொண்டு இவ்வுலகம் தழைக்கவே —தீ
மழைக்கும் ஓர் குடை உன் கரங்களே
மண்ணை மீட்க நீ விண்ணை மறைக்க வா

— திவ்யா —



# கல்லான கணவன்

துளசி

தொலைக்காட்சியில் பெண்ணின் இடுப்பைக் காட்டி பற்பசைக்கு விளம்பரம் செய்தபின் மறுபடியும் விளம்பரக் குழந்தைகள் தோன்றி குறும்புகள் செய்தன. சிவாவும், சுதாவும் 'செற்றி' யில் உட்கார்ந்து ஆர்வமாக ரசித்துக் கொண்டிருந்தார்கள். லட்சுமி தட்டிலிருந்த சாப்பாட்டைப் பிசைந்து அவர்களின் வாயில் போட்டுக் கொண்டிருந்தாள்.

இரவு ஏழு மணிச் செய்திகள் ஆரம்பிக்க சில நிமிடங்களே இருந்தன. சம்பு, வங்கி, சப்பாத்து என்று விளம்பரங்கள் மாறி மாறி வேறு வேறு பெண்களின் உடம்புகளை தொலைக் காட்சி ரசிகர்களுக்கு காட்டிக் கொண்டிருந்தன.

சுதாவுக்கு விக்கல் எடுக்க, தலையில் தட்டி எளிய முறையில் நிவாரணமளித்து மறுபடி தன் பணியைத் தொடர்ந்தாள் லட்சுமி. மூக்கிற்கு கீழே தாராளமான சுற்றுடலை சாப்பாட்டால் அலங்கரித்தபடி பிள்ளைகள் தொலைக்காட்சியை நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

விளம்பரங்கள் முடிந்து அன்றைய நிகழ்ச்சி நிரல்கள் ஆரம்பமாகின. சாப்பாடும் முடிந்து போக லட்சுமி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு சமையலறைக்குப் போனாள். அவர்களின் முகங்கள், கைகளைக் கழுவித், துடைத்து "ரீவி பாத்தது காணும். இனி படியுங்கோ" என்று உத்தரவிட்டதும் அவர்களின் முகங்கள் வாடிப்போய் விட்டன.

அவர்களுக்கு எரிச்சலூட்டு நேரம் இந்தப் படிக்கும் நேரம்தான். மெதுவாக நடை போட்டு மேசைக்குப் போய் சுற்றியிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். பாடப் புத்தகங்களை வேண்டா வெறுப்பாகத் திறந்தார்கள்.

லட்சுமி தொலைக் காட்சியை நிறுத்த வரும்போது வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

ஈரக் கையைச் சட்டையில் துடைத்தபடி லட்சுமி கதவைத் திறந்தாள். வெளியே சுந்தரலிங்கம் ஒரு மாதிரியாக நின்றான். தூரத்தில் கார் ஒன்று புறப்பட்டுப் போவது தெரிந்தது.

"உங்கடை திறப்பு எங்கையப்பா?"

"பொறு. உள்ளுக்க வந்து சொல்லுறன்" சுந்தரலிங்கத்தின் குரல் ஆரோகண, அவரோகணத்தில் ஒலித்த போதுதான் அவளின் நிலை அவளுக்குப் புரிந்தது. படிகளில் ஏறுகையில் தடுமாறி, கதவைப் பிடித்து, பின் சுதாகரித்து, தள் ஆ டிய ப டி யே உள்ளே வந்தான்.

லட்சுமி கதவைச் சாத்தினாள். சுந்தரலிங்கம் சமீபத்தில் ஏற்படுத்திக் கொண்ட பழக்கம் இது. யாரும் எதிர்பார்காமலேயே இப் பழக்கம் சுந்தரலிங்கத்தைப் பற்றிவிட்டது. லட்சுமி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளுக்காகத் தன்னை தயார் படுத்திக் கொண்டாள்.

"ஏ, அங்க ஏன் நிக்கிறாய்? இஞ்சால வா. திறப்பு எங்க எண்டு கட்டாயம் உனக்குத் தெரிய வேணுமோ?" சுந்தரலிங்கம் கதிரையொன்றின் பின் பக்கத்தை கைகளால் பிடித்தபடி தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். தொலைக் காட்சியில் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனியர்களை அடித்து, நொருக்கி படுகாயப்படுத்திக் கொண்டிருந்தது.

"நான் கேக்கிறன். பேசாம நிக்கிறாய். காது செவிடே?"

அப்போதுதான் பிள்ளைகளும் அங்கிருப்பதை லட்சுமி அவதானித்தாள். அவர்களை படுக்க வைப்பதற்காக நகர்ந்தாள்.

"இஞ்ச வா எண்டு கூப்பிடுறன். அங்க போறாய். உனக்கு கொழுப்பு கூடிப் போச்சு" சுந்தரலிங்கம் அவளை நோக்கி வர முயன்று, கொஞ்சம் நகர்ந்து, தடுமாறி விழப் போக லட்சுமி விரைந்து போய் அவனைப்பிடித்துக் கொண்டாள்.

"என்னடி கட்டிப் பிடிக்கிறாய். கேக்கிற கேள்விக்கு மறுமொழி சொல்லு" சுந்தரலிங்கம் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

பிள்ளைகள் பாடப் புத்தகங்களை அப்படியே போட்டுவிட்டு வித்தியாசமான கோணங்களில் நிற்கும் அப்பாவையும் அம்மாவையும் பயத்துடன் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

"பேசாம உப்பிடியே கதிரையில இருங்கோப்பா. சாப்பாடு போட்டுக் கொண்டு வாறன்" லட்சுமி மெதுவாகச் சொன்னாள்.

"ஒண்டு தந்தேனெண்டா பல்லெல்லாம் கொட்டிண்ணும். என்ன நக்கலடிக்கிறியே? சாப்பாடு போட்டுத் தரப் போறியோ? நானென்ன பால் குடியே?"

லட்சுமி மனதில் பொங்கும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தியபடி கணவனை கதிரையில் உட்கார வைக்க முயற்சி செய்தாள்.ஆனல் அவன் ஒத்துழைப்பதாக இல்லை.அவனுள்ளே போயிருந்த அற்ககோல் அவனுடைய மூளையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

பிள்ளைகள் இன்னமும் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.கொஞ்ச நாட்களாகவே இப்படியான இரவுக் காட்சிகளை அவர்கள் பார்த்திருந்ததால் என்ன நடக்கப் போகுதோ என்று பயந்து கொண்டிருந்தார்கள்.

தொலைக்காட்சியில் இஸ்ரேல் மாறி அணுகுண்டு விற்பனை நடந்து கொண்டிருந்தது.

"என்னை இளிச்சவாயன் எண்டு எல்லாரும் நினைச்சுக் கொண்டிருக்கிறியள் என்ன?வீட்டை இப்பவே கடிதம் எழுதிப் போடு.எனக்கும் கொஞ்சம் விசயம் தெரியுமெண்டு"

"சத்தம் போடாதேங்கோப்பா.அங்கால பிள்ளையள் பாத்துக் கொண்டு நிக்குது."

"கதையை மாத்தாதை.எனக்கு இண்டைக்கு கட்டாயம் முடிவு தெரிய வேணும்.எடுப்பிச்சு தர ஏலுமோ?ஏலாதோ?"

"நாளைக்கு வடிவா கதைப்போம்.இப்ப உதில பேசாம இருங்கோ.சாப்பாடு போட்டுக் கொண்டு வாறன்"

'பளீர்'

தன்னை விடுவித்துக் கொண்ட சுந்தரலிங்கம் ஓங்கி அடித்த அடியில் லட்சுமியின் கன்னத்தில் அடையாளங்கள் ஏற்பட்டன.அவள் தடுமாறிப் போனுள்.கண்கள் கண்ணீர் மீதான தடையை அகற்றியிருந்தன.

பிள்ளைகள் இப்போது பீதியுடன் நடந்து போய் படுக்கை அறை வாசலில் நின்றுர்கள்.

"அடுத்த அடி விழக்கு முதல் சொல்லிப் போடு.ஏலுமோ?ஏலாதோ?"கொஞ்சமிருந்த சக்தியும் லட்சுமியை அடித்ததில் செலவழிந்து போய்விட சுந்தரலிங்கம் அப்படியே சரிந்து தரையில் உட்கார்ந்தான்.

லட்சுமி கண்ணீர் வழிந்து கொண்டிருக்க,பிள்ளைகளிடம் போய் அவர்களைப் படுக்க வைத்தாள்.போர்வையை மூடி விட்டு அவள் நகரும் போது "அம்மா இங்க இருங்கோ.வெளியில போகாதீங்கோ"என்று பிள்ளைகள் கெஞ்சின.

லட்சுமி அவர்களைப் பார்த்து மெல்லச் சிரித்துவிட்டு,விளக்கை

அணைத்து, கதவைச் சாத்திக் கொண்டு அறைக்கு வெளியே வந்தாள்.

சுந்தரலிங்கம் இன்னமும் அப்படியே இருந்தான். அவனை நெருங்கிப் போய் சப்பாத்துகளை கழட்டினுள். குனிந்திருந்தவன் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்து "ஏலுமோ? ஏலாதோ?" என்று குமறினுன். அவள் பேசாமலிருக்கவே காலால் உதைந்தான். லட்சுமி வலியால் வயிற்றைப் பிடித்துக் கொண்டாள். கண்ணீர் தொடர்ந்து பெருகிக் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரம் அப்படியே இருந்தவள் எழுந்து போய் 'செற்றி'யில் அமர்ந்தாள். கன்னமும், வயிறும் வலித்துக் கொண்டிருந்தன.

கணவன் இப்படி மாறுவானென லட்சுமி ஒருநாள் கூட கற்பனை செய்து பார்க்கவில்லை. இலங்கையிலிருக்கும் போதும் சரி, ஜேர்மனிக்கு வந்த ஆரம்ப நாட்களிலும் சரி சுந்தரலிங்கம் சராசரிக் கணவனுகவும், அப்பாவாகவும் நடந்து கொண்டான். அவர்கள் குடும்பத்தில் பெரிய பிரச்சினைகள் எதுவும் முன்பு ஏற்படவில்லை. சிறிய முரண்பாடுகள் தோன்றினுலும் அவை உடனுக்குடன் தீர்க்கப்பட்டு அல்லது சமாளிக்கப்பட்டு வந்தன.

சில மாதங்களுக்கு முன்புதான் சுந்தரலிங்கம் மதுவை ஆரம்பித்திருந்தான். அதுவும் அற்ககோல் விசிறிகளின் நட்பினுல்தான். ஆரம்பத்தில் மதுவின் அளவை அவன் கட்டுப்படுத்தியிருந்தாலும் நாட்கள் செல்ல செல்ல கட்டுப்பாடு அவனிடமிருந்து பறிக்கப்பட்டு மதுவினுல் கைப்பற்றப்பட்டது. அப்போதும் வீட்டில் அவன் பெரிய ஆர்ப்பாட்டங்கள் எதுவும் செய்யவில்லை. ஏதாவது கோமாளித்தனமாக செய்துவிட்டு அடங்கி விடுவான்.

நீண்ட காலமாக தடைப்பட்டிருந்த லட்சுமியின் தங்கையின் கல்யாணம், மிகுந்த சிரமத்தின் மத்தியில் சேகரிக்கப்பட்ட சீதனத்தினுல் நிறைவேற்றப்பட்டு விட்டதாக ஊரிலிருந்து வந்த கடிதத்தை லட்சுமி சுந்தரலிங்கத்திற்கு வாசித்துக் காட்டிய பின்தான் அவன் மாறிப் போனுன்.

தனக்கு தந்ததைவிட அதிகமான சீதனத்தை மற்ற மாப்பிள்ளைக்கு கொடுத்தது அவனுக்கு எரிச்சல் மூட்டியது. தன்னை லட்சுமி வீட்டார் இழிவு படுத்தி விட்டதாகவும், ஏமாற்றி விட்டதாகவும் நினைத்து நினைத்து அவன் வெந்து கொண்டிருந்தான். அவனுடைய கோபம் திடீரென குடியின் அளவை அதிகரித்துவிட்டது. பகல் முழுக்க குடிப்பதும் இரவில் வீட்டுக்கு வந்து லட்சுமியுடன் தேவையில்லாமல் சண்டை பிடித்து அவளை அடித்து துன்புறுத்துவதும் புதுவழக்கமாக அவனுல் நடைமுறைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தனது ஆத்திரத்துக்கும், கோபத்துக்கும், குடிவெறிக்கும் லட்சுமியை ஒரு வடிகாலாக அவன் பயன்படுத்தி வந்தான்.

அடங்கிப் போகும் லட்சுமியின் சுபாவமும், மௌனமாக தனக்குள் அழுது முடிக்கும் அவள் தன்மையும் அவனை இன்னும் உற்சாகப்படுத்தின. அவளை அடித்து உதைப்பதற்கு ஏதாவது காரணம் வேண்டுமென்பதற்காக

வீட்டுக்கு கடிதம் எழுதி காசு வேண்டித் தரும்படி அவளை வற்புறுத்தி வந்தான்.

அவனுடைய அடாவடிக்கு இதுவரை எந்த ரூபத்திலும் எதிர்ப்பு வராததால் அவனுக்கு தைரியம் வந்திருந்தது. எனவே தான்தோன்றித்தனமாக நடந்தான்.

சுந்தரலிங்கத்தின் சகோதரன் ஒருவன் அதே நகரத்திலிருந்தான். லட்சுமிக்கு பிள்ளைகளை விட்டால் வேறு யாருமே இல்லை.

நோவை தாங்கிக் கொள்வதும், கண்ணீர் வடிப்பதும், சில சமயங்களில் இரத்தத்தை துடைப்பதும் மறுபடி கணவனுக்கு சேவை செய்வதுமாக அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள். சில சமயங்களில் அவள் பொறுமை இழந்தாலும் பிள்ளைகளைப் பார்த்து தன்னை அடக்கிக் கொள்வாள்.

சுந்தரலிங்கம் தரையில் படுத்து அப்படியே தூங்கிப் போய்விட்டான். லட்சுமி நீண்ட நேரம் கண்ணீருடன் கண்விழித்திருந்தாள்.

மறுநாள் காலை சுந்தரலிங்கம் வெளியே போய் சிறிது நேரத்திற்குப் பின் கணேசன் வந்தான். அவன் சுந்தரலிங்கத்தின் தம்பி.

லட்சுமி சமையலறையில் அலுவலாக இருந்ததால் மற்ற அறையில் பிள்ளைகளுடன் அவன் விளையாடிக் கொண்டிருந்தான். பிள்ளைகள் அவனிடத்தில் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அவன் உணவுவிடுதியொன்றில் வேலை செய்கிறான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அண்ணனின் வீட்டுக்கு வந்து பிள்ளைகளுடன் பொழுது போக்குவான். வரும்போதெல்லாம் அவர்களுக்கு இனிப்பு, விளையாட்டுச் சாமான்கள் என்று அள்ளிக் கொண்டு வருவான்.

அண்ணன் குடிக்க ஆரம்பித்திருப்பதாக கேள்விப்பட்டதுமே வீட்டுக்கு வந்து சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்டான். வாய் பேச்சு முற்றி கை கலப்பு ஏற்படும் நிலை வந்துவிட்டது. அதன் பிறகு அண்ணன் வீட்டிலிருக்கும் நேரங்களில் அவன் அங்கு வருவதில்லை.

"சித்தப்பா, அப்பா கூடாது" சிவா கணேசனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு சொன்னான்.

"ஏன்?" கதிரைக்கு கீழே போய்விட்ட காரை எடுத்து சுதாவிடம் கொடுத்தபடி கேட்டான் கணேசன்.

"நேத்து அப்பா அம்மாக்கு அடிச்சது" சிவா காதோரமாகச் சொன்னான்.

கணேசன் சட்டென நிமிர்ந்தான். இதைப்பற்றி அவன் சாடைமாடையாகக் கேள்விப்பட்டிருந்தான். ஒருநாள் தெருவில் சுந்தரலிங்கத்திடம்

இதைப் பற்றிக் கேட்டபோது "இது உனக்கு தேவையில்லாத விசயம்" என்று அவன் சொன்னது கேள்விப்பட்டவைகளை உறுதிப்படுத்தியது. இதைப் பற்றி லட்சுமியுடன் கதைப்பதற்காகவே அவன் நேரத்துடன் வந்திருந்தான்.

"அம்மா பாவம். கன நேரமா அழுதுகொண்டிருந்தா." சிவா சொல்லிக் கொண்டிருக்கும்போதே தழுதழுத்தான். கணேசன் ஆதரவாக அவன் தலையைத் தடவினான். இறுக அணைத்தான். பிள்ளைகளின் பிஞ்சு மனதின் நோவை அவனால் உணர முடிந்தது.

அண்ணனை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அவர்களுடைய வீட்டில் அவன் கொஞ்சம் வேறுபாடானவன். அண்ணன் நிறைய சீதனம் வாங்கி திருமணம் செய்ய இருப்பதாக கேள்விப்பட்டதுமே துள்ளிக்குதித்தவன் அவன் ஒருவன்தான். "சின்ன பெடியன். சும்மா கத்துறான்" என்று அப்போதிருந்த வயது வந்தவர்கள் அவனுடைய எதிர்ப்பை மதிக்கவில்லை. இதில் அவனுக்கு வருத்தமே. தானுவது அவர்களுக்கு ஒருநாள் பாடம் படிப்பித்தே ஆகவேண்டும் என்று அவன் வைராக்கியம் கொண்டிருந்தான்.

அண்ணியை அண்ணன் அடித்து துன்புறுத்துவதாக கேள்விப்பட்ட நாளிலிருந்து அவன் துடித்துப் போயிருந்தான். பெற்றோரை வருத்தி கை நிறைய சீதனமும் வாங்கி திருமணம் செய்து கொண்டபின் இப்படி யாருமே இல்லாத இடத்திற்கு கூட்டி வந்து அவளைத் துன்புறுத்துவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதற்கு எப்படி முடிவு கட்டலாம் என்று வேலை செய்து கொண்டிருக்கும்போது யோசித்துக் கொண்டிருப்பான். கடைசியாக ஒரு தீர்மானம் செய்துகொண்டுதான் லட்சுமியைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறான்.

"கோப்பியைக் குடியுங்கோ" லட்சுமி பாத்திரங்களைக் கழுவியதால் ஈரமாகி வந்து கோப்பையைக் கணேசனிடம் நீட்டினாள். கணேசன் வாங்கி மேசை மேல் வைத்தான்.

"அண்ணி குசினி அலுவல் முடிஞ்சுதே?"

"ஏன் பசிக்குதே?" லட்சுமி சிரித்தாள். இவ்வளவு வேதனையிலும் இவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்று எண்ணி கணேசன் வியந்து போனான்.

"ஆறுதலாச் சாப்பிடலாம். இப்ப உங்களோட கதைக்க வேணும்"

"அடுப்பில ஒரு கறிதான் இருக்கு. இறக்கி வைச்சிட்டு வாறன்" லட்சுமி மீண்டும் சமையலறைக்குள் அடைக்கலமானாள்.

"சிவா, தங்கச்சியையும் கூட்டிக் கொண்டு அந்த றூமில போய் விளையாடுங்கோ" கனேசன் சிவாவிடம் பரிவாகச் சொன்னான்.

சிவா கனேசனின் கழுத்தை விடாமல் "நீங்களும் வாங்கோ சித்தப்பா" என்றான்.

"அச்சாப்பிள்ளையெல்லே, நான் கோப்பி குடிச்சிட்டு வாறன். நீங்க போயிருந்து விளையாடுங்கோ" கனேசன் கெஞ்சிக் கேட்டதும் சிவா, தங்கச்சியுடன் விளையாட்டுச் சாமான்களையும் தூக்கிக் கொண்டு அடுத்த அறைக்குப் போனான்.

கோப்பி குடிக்கும்போது அண்ணியுடன் எப்படிக் கதைப்பது என்பது பற்றி கனேசன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

"அலுவல் எல்லாம் முடிஞ்சுது. சொல்லுங்கோ என்ன கதைக்கப் போறியள்?" லட்சுமி சீப்பினால் தலை வாரியபடி வந்தாள்.

"உதில இருங்கோ அண்ணி. வடிவா கதைக்க வேணும்"

என்னவாயிருக்கும் என்ற ஆவலுடன் லட்சுமி எதிரேயிருந்த கதிரையில் அமர்ந்தாள். கனேசன் அவளைப் பார்த்தான். கன்னத்திலிருந்த விரல் அடையாளங்கள் அவன் மனதை நோக வைத்தன.

"நேற்றும் அண்ணை அடிச்சவரோ?" கனேசனின் கேள்வி லட்சுமியைத் திடுக்கிட வைக்க அவனைப் பார்த்தாள்.

"நீங்கள் என்னைப் பிறத்தி மனுசனா நினைச்சு ஒண்டும் சொல்லாட்டியும் எனக்கு எல்லா விசயங்களும் தெரிய வரும். உண்மையைச் சொல்லுறன் அண்ணி. உங்களை நான் அண்ணி எண்டு கூப்பிட்டாலும் என்ரை அம்மாவாத்தான் நினைக்கிறன். அதாலதான் நான் அண்ணையோட சண்டை பிடிச்சாலும் இங்க வந்து போய் கொண்டிருக்கிறன். இஞ்ச இருந்து சாப்பிடேக்க அம்மா எனக்கு சாப்பாடு போடுற மாதிரித்தான் நான் நினைக்கிறேன்."

லட்சுமி பிரமிப்புடன் கனேசனைப் பார்த்தாள். அவன் எப்போதும் இப்படிக் கதைத்ததில்லை. அவனுடைய வார்த்தைகள், அம்மா என்று அவன் சொன்னது அவளை நெகிழச் செய்தன. கண்கள் கலங்கிப் போக சட்டெனப் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"அண்ணி, இந்தச் சீதன விசயம் எனக்குப் பிடிக்காத ஒண்டு. உங்களைக் கலியானம் செய்யிறதுக்காக அண்ணை சீதனம் வாங்கேக்க வீட்ட நான் சண்டை பிடிச்சனான். ஆனா ஒருத்தரும் என்ரை பேச்சைக் கேக்கேல. கலியாணம் செய்யிறதுக்கு காசு வாங்கேக்கயே அவரைப்பற்றி நீங்கள் புரிஞ்சிருக்க வேணும். காசுதான் அவருக்கு முக்கியம் எண்டு. காசை வா

ங்கித் தா எண்டு அண்ணை இப்ப உங்களை துன்புறுத்துறதை என்னால அனும திக்க முடியாது.இப்ப இங்க என்னைத் தடுக்கவோ,என்னைக் கதைக்கா மல் பண்ணவோ யாரும் இல்லை.நான் இன்னும் சின்னப் பெடியனுமில்லை. அம்மா அடி வேண்டுறதை நான் பாத்துக் கொண்டிருக்க மாட்டேன்."

கணேசன் நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிருந்தான்.எந்த ஆதரவு ம் இல்லாமல்,தன்னுடைய மனக் கவலைகளையெல்லாம் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டிருந்த லட்சுமிக்கு கணேசனின் ஆதரவான,பரிவான வா ர்த்தைகளைக் கேட்டதும் துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது.தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அம்மாவின் அழுகுரல் கேட்டதும் பிள்ளைகள் எட்டிப் பார்த்தார்க ள்.

லட்சுமி அழுது முடித்து நிறுத்தினாள்.கைகளால் கண்ணீரைத் துடைக்க முயன்று தோற்றுப் போனாள்.

கணேசன் சிறிது நேரம் மௌனித்தான்.அன்னியை அழ விடுவது அவ னுக்கு நல்லதாகப்பட்டது.அப்போதுதான் அவளால் அமைதியடைய முடியு மென்று கருதினான்.

கொஞ்ச நேரத்தின் பின் "அழுது முடிச்சிட்டியள் எண்டு நினைக்கிற ன்.இனிமேல் நீங்கள் அழப்படாது.பொம்பிளையளின்ரை கண்ணீர் ஆம்பிளை யளுக்கு குளுக்கோஸ் மாதிரி.அது அவங்களை இன்னும் உற்சாகப்படுத்தும். ஆனபடியால் கண்ணீர் விடவே கூடாது.இப்ப நான் ஒரு முடிவோட வந்தி ருக்கிறன்.நான் உங்களுக்குச் சொல்லுறதை உங்கட மகன் உங்களுக்குச் சொல்லுறதா நீங்க எடுக்க வேணும்"

கணேசன் நிறுத்த லட்சுமி நிமிர்ந்தாள்.

"இப்ப இருக்கிற பிரச்சினைக்கு ஒரே ஒரு முடிவுதான் இருக்கு.நீ ங்கள் இனியும் அண்ணையோட சேர்ந்து இருக்கக் கூடாது.பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு இந்த வீட்டை விட்டு வெளியில போக வேணும்"

லட்சுமி அதிர்ச்சியுடன் கணேசனைப் பார்த்தாள்.அவனுடைய வார் த்தைகளைப் புரிந்து கொள்ள அவளுக்கு கொஞ்ச நேரம் எடுத்தது.அவ ள் கொஞ்சம் கூட சிந்தித்துப் பார்த்திராத தீர்வு இது.அவளால் உடனே அதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

"எனக்குத் தெரியும் நீங்கள் என்ன யோசிச்சுக் கொண்டிருக்கிறிய ள் எண்டு.அடிச்சாலும்,உதைச்சாலும் அவர் எனக்குத் தாலி கட்டின புரு சன்.சாகிறவரைக்கும் அவற்றை காலடியிலேயே இருக்க வேணும்.அவரு க்குப் பணிவிடை செய்ய வேண்டியது என்ரை கடமை.அவர் என்ன செய்தா லும் ஏற்றுக் கொள்ள வேண்டியது என்ரை விதி.என்னைப் புருசனைப் பிரிய

வேண்டும் என்று சொல்வதற்கு நீ யார்? இவ்வளவுதானே சொல்லப்போறீங்க?"

தன் மனதை கணேசன் படித்துக் கொண்டிருப்பதைக் கேட்டு லட்சுமி பிரமித்துப் போனாள். அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை. பலவாறு நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தாள்.

"உங்களில பிழையில்லை அண்ணி. கல்லானாலும், புல்லானாலும் புருசனைக் கைவிடக் கூடாது என்டு சீவிக்கிற சமுதாயத்தால வளக்கப்பட்ட ஆள்தான் நீங்களும். பள்ளிக்கூடத்திலே படிக்கிறதே நளாயினி புருசனை கூடையில வைச்சு விபச்சாரி வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போற கதையளைத்தானே. நான் சொல்லுற காரணங்களை, தீர்வுகளை ஏற்றுக் கொள்ளுறதுக்கு நீங்கள் தயங்கலாம். ஆனால் இந்தத் தயக்கம் உங்களுக்கு எந்த விதத்திலும் உதவாது என்டதை தெரிஞ்சு கொள்ள வேணும். இப்ப இலங்கையில இருந்திருந்தா நிலைமையே வேற. எங்கட முடிவை எங்களால எடுக்க முடியாது. ஆனா இப்ப நாங்க இருக்கிறது ஜேர்மனியில. தங்களையும் குழப்பி மற்றவைகளையும் குழப்பிக் கொண்டிருக்கிற சமுதாயம் இங்க இல்லை. சுயமாக நாங்களே சிந்திச்சு எங்களைப் பற்றித் தீர்மானிக்கிற சுதந்திரம் இப்ப, இங்க எங்களுக்கு இருக்கு. இதைச் சரியான நேரத்தில, சரியான முறையில பயன்படுத்த வேணும். இங்க படிக்க கூடிய பாடங்களை படிச்சா அது இலங்கைக்குத் திரும்பிப் போனாலும் உதவும்."



லட்சுமி இன்னும் பிரமிப்பிலிருந்து விடுபடவில்லை. ஆனாலும் அவள் மனம் கணேசன் சொல்வதைக் கிரகித்துக் கொண்டிருந்தது.

"நான் சொன்னது ஒண்டும் பயங்கரமான விசயமோ, முறைகேடான விசயமோ இல்லை. சாத்தியமான ஒன்றுதான். எந்த ஒரு விசயத்தையும் விரசமாக எடுத்துக் கொள்றது அவையவையின்ரை மனதைப் பொறுத்தது. பொம்பிளையளின்ரை பில்டிங்கில நீங்களும் பிள்ளையளும் இருக்கிறதுக்கு நான் ராத்கவுசில (நகரசபை) கதைச்சு ஏற்பாடு செய்யிறன். நீங்கள் எந்தக் கஷ்டமும் இல்லாமல் அங்க இருக்கலாம். சோசல் காசு தனியா வரும். ஏதாவது அவசர உதவி தேவையெண்டா எனக்கு போன் பண்ணினா நான் வருவேன். இது உங்கட புருசனுக்கு சின்ன அதிர்ச்சி வைத்தியம்தான். நாங்கள் அவர் திருந்துறதுக்கு ஒரு சந்தர்ப்பம் குடுத்துப் பாப்போம். தனிய இருந்து யோசிச்சு, தன்ரை பிழையை உணர்ந்து, தானா அவர் உங்களை தேடி வந்தா, நீங்களும் விரும்பினால் அவரை ஏற்றுக் கொள்ளலாம். அப்படி நடக்கேலயெண்டா சட்டப்படி பிரியிறதுக்கு வழியப் பாப்போம். இப்ப நீங்க யோசியுங்கோ. அடுத்தவை ஏதும் சொல்லுவினமோ எண்டு மட்டும் தயவு செய்து குழம்பாதைங்கோ. உங்களைப் பற்றியும், உங்கட பிள்ளையளைப் பற்றியும் மட்டும் யோசியுங்கோ. அது போதும்" கணேசன் எழுந்து பிள்ளைகள் இருந்த அறைக்குப் போனான்.

"அம்மா ஏன் அழுகிறா?" சிவா கணேசனின் கைகளைப் பிடித்தபடி கேட்டான்.

"நேற்று அப்பா அடிச்சது இன்னும் நோகுது எண்டு அழுகிறா"

"டொக்ரர் மாமாட்ட கூட்டிக் கொண்டு போவோமே?" சிவா அக்கறையோடு கேட்டான்.

"மருந்து குடுத்தனான். கொஞ்சம் பொறுத்துப் பாப்போம் என்ன" கணேசன் தரையில் உட்கார்ந்து அவர்களுடன் விளையாட ஆரம்பித்தான்.

லட்சுமி தனிமையில் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஆயிரம் கருத்துகள் அவளைச் சூழ்ந்து திரை வைத்துக் கொண்டிருந்தன. அவள் ஒவ்வொன்றாக கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள். சரி பிழைகளைப் பார்த்தாள். சாதகங்களையும் பாதகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். நடந்தவைகளை நினைவுபடுத்திப் பார்த்தாள். எதிர்காலத்தை ஆலோசித்தாள்.

நேரம் போய் கொண்டிருந்தது.

அறை வாசலில் லட்சுமி வந்து நின்றாள். கணேசன் அவளைக் கவனியாது சிவாவுடன் காரோட்டினான்.

"பொம்பிளையளின்ரை பில்டிங்குக்கு மாறிப் போக ஸ்ரட்காறங்கள் (நகரசபையினர்) ஒம்படுவாங்களே?" லட்சுமியின் கேள்வியைக் கேட்டு கணேசன் வெற்றியுடன் தலைநிமிர்ந்தான்.

# அந்நியர்கள்

அலைகடல் இரைந்தும்
தாண்டி
அழுகுரல் கேட்கும்
இந்தப் பூமியில்
யார்
இவர்கள்?

உதயத்திற்காக
உழுது கிடக்கும்
இதய
வயல்களுக்குள்
நெருஞ்சிகளால்
நிலை கொள்ளவா முடியும்

வெளிச்சத்தை தின்ன
நினைத்த
விட்டில்களைப் பார்த்து
இருட்டுத் தான்
இரை
என்கிறார்கள்

அலைகடல் இரைந்தும்
தாண்டி
அழுகுரல் கேட்கும்
சொந்த பூமியில்
யார்
இவர்கள்?

எங்கள்
கூட்டுக்குள்ளேயே
கொள்ளியைச் செருகிவிட்டு
தீயணைப்பதாக
தெருவெல்லாம் நிற்கிறார்கள்
யார்
இவர்கள்?

தொடுகரை தொடங்கி
மறுகரை வரை
அலைகளுக்கு
தொட்டில் கட்டி தாலாட்டும்
சமுத்திரமே
நீ கூட
நாங்கள் நிமிர்ந்தால்
எங்கள் நிழலுக்குத்தான்
சேவகம் செய்வாய்
எங்களை எப்படி
பனித்துளிகளால்
பணயம் வைக்க முடியும்?

அலைகடல் இரைந்தும்
தாண்டி
அழுகுரல் கேட்கும்
எங்கள் பூமியில்
யார்
இவர்கள்?

அப்புகாமியும், அருந்தவராசாவும்
அப்துல்காதரும்
கை கோர்த்தால்
இவர்கள்
புரிந்து கொள்வார்கள்
யார்
நாங்கள் என்று.

கவிவர்மன்

# தூண்டில்

கடல்: 1 பெப்ரவரி 1988 கலம்: 2

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

அட்டை, ஓவியம்................ ரமணி

வெளியீடு............ தென்னாசிய நிறுவனம்

முகவரி................. SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202-507156

"கஷ்டத்திற்குப் பயந்து செத்துப்போறதுன்னு இந்த உலகத்திலே மனுசனை இருக்கமுடியாது. அவன் கையாலாகாத சோம்பேறி. கஷ்டத்தை பொறுத்து வாழ்றவன்தான் மனுசன். செத்துப் போற மனுசன் இல்லே. பிரச்சினை சாகாது. அது இன்னொரு மனுசனையும் சாகடிக்கும்."

மாத்தளை சோமுவின் 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' நாவலிலிருந்து....

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தென்னாசிய நிறுவனத்தின் சஞ்சிகையான 'தூண்டில்' மாதமொரு முறை வெளியாகிறது.

தூண்டிலைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 6 டி.எம். மேலதிகமாகும்.

வங்கி கணக்கு இல. KONTO NR. 26 85 40
STADT SPARKASSE WUPPERTAL
BLZ. 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.